# கடலிலிருந்து ஒரு கைப்பிடி நீர்!



**கலைஞர் தன் வாழ்நாளெல்லாம் விரும்பிச் செய்த காரியம் படிப்பதும், எழுதுவதும்தான். 1938இல் தன்னுடைய பதினான்காவது வயதில் எழுதத் தொடங்கினார். கடைசி மூச்சுவரை எழுதினார். ஒருநாள் எழுதாமல், படிக்காமல் இருங்கள் என்று கட்டாயப்படுத்தியிருந்தால் அவர் தற்கொலை செய்துகொண்டிருப்பார். அந்தளவிற்குப் படிப்பதிலும் எழுதுவதிலும் பித்தாக இருந்தார். உலகில் இப்படியொரு எழுத்தாளரைக் காண்பது அரிது.**

கலைஞருக்கு இலக்கிய ஆசானாக இருந்தவர் திருவள்ளுவர். அவருக்கு எப்போதும் படித்துத் தீராத, பேசித் தீராத, எழுதித் தீராத நூலாக இருந்தது – திருக்குறள் மட்டுமே. தன்னுடைய இலக்கிய ஆசானுக்குக் கலைஞர் செய்ததுபோல் வேறு எந்த எழுத்தாளரும்செய்யவில்லை. தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசு அலுவலகங்களிலும், பள்ளி, கல்லூரிகளிலும் திருக்குறளை எழுதவைத்தவர். சென்னையில் வள்ளுவர் கோட்டத்தையும், கன்னியாகுமரியில் 133 அடி சிலையையும் அமைத்துத் தமிழ்நாட்டின் அடையாளம் திருவள்ளுவர்தான் என்று நிரூபித்தவர்.

**அரசியல் ஆர்வம் கலைஞரை எழுத வைத்ததா? படிப்பும் எழுத்தும் அவரை அரசியலுக்கு அழைத்து வந்ததா என்று பிரித்துச் சொல்வது கடினம். படிப்பும், எழுத்தும்தான் அவரை அரசியலுக்குக் கொண்டு வந்து சேர்த்தது என்று நான் நினைக்கிறேன். இலக்கியத்தை வாழ்க்கையாகப் பார்த்தவர், வாழ்க்கையை இலக்கியமாகப் பார்த்தவர். அதனால்தான் அவருக்கு 'கலைஞர்' என்ற பெயர் வந்தது, அவருடைய அரசியல் பயணத்திற்காக, அவர் பெற்றிருந்த அரசியல் அதிகாரத்திற்காக அல்ல. அவருடைய எழுத்தின் மேன்மைக்காக, வலிமைக்காகக் கொடுக்கப்பட்ட பெயர், எவ்வளவு பொருத்தமான பெயர். இந்தப் பெயர் அவரைத் தவிர வேறு யாருக்கும் தமிழ்நாட்டில் பொருந்தியிருக்காது. சொந்த பெயரால் அறியப்பட்டதைவிட, 'கலைஞர்' என்ற பட்டப் பெயரால் அறியப்பட்டதுதான் அதிகம். அந்தப் பெயர்தான் இன்றுவரை உச்சரிக்கப்படுகிறது, கொண்டாடப்படுகிறது, இது ஒரு உலக அதிசயம். காலம் யாருக்கும் எதையும் எளிதில் தந்துவிடாது.**

கலைஞர் எழுத்தாளராக அதிகம் கொண்டாடப்படுகிறாரா? அரசியல்வாதியாகக் அதிகம் கொண்டாடப்படுகிறாரா என்றால், எழுத்தாளராகத்தான் கொண்டாடப்படுகிறார். அரசியல்வாதியாக விமர்சிக்கப்படுகிறார். அதே நேரத்தில் அவர் இலக்கியவாதியாக, எழுத்தாளராக விமர்சிக்கப்படுவதில்லை. அவருடைய அரசியல் எதிரிகள்கூட, 'மகத்தான எழுத்தாளர்தான்' என்றுதான் கொண்டாடுகிறார்கள். எழுத்தில், இலக்கியத்தில் அவருக்கு எதிரிகள் இல்லை. ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் கொண்டாடுகிற எழுத்தாளர் என்றால் அது 'கலைஞர்' மட்டும்தான்.

கலைஞர், மற்ற எழுத்தாளர்கள் போல் இல்லை. பொழுதுபோக்கு அம்சங்களை எழுதியவரில்லை. பணத்திற்காக, புகழுக்காக எழுதியவரில்லை. கொள்கைக்காக, லட்சியத்திற்காக எழுதியவர். தன்னுடைய இலட்சியம், கொள்கை இதுதான் என்று பிரகடனப்படுத்திவிட்டு எழுதியவர். அவர் அளவிற்கு அரசியல் தெளிவுள்ள ஒரு எழுத்தாளரைத் தமிழ்நாட்டில் அடையாளப்படுத்துவது கடினம்.

கலைஞருடைய லட்சியம், கொள்கை என்ன? தமிழ்ச் சமூகத்தினுடைய வளர்ச்சி, மேம்பாடுதான். மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, பெண் கல்வி, பெண்கள் முன்னேற்றம், சமதர்மம்தான். கவிதை, சிறுகதை, நாடகம், நாவல், கட்டுரை, திரைக்கதை, வசனம் என்று எதை எழுதினாலும் அதில் தன்னுடைய லட்சியத்தை, கொள்கையைப் பேசாமல் இருக்க மாட்டார். எதை எழுதினாலும் தான் சொல்ல விரும்பும் விஷயத்தை நேரடியாக எழுதுவார். கலைஞருடைய எழுத்து, கொள்கை முழக்கம்தான். லட்சிய முழக்கம்தான். அரசியல் பேச்சுதான். ஆரம்பத்திலிருந்து இறுதிவரை 'கொள்கை மாறாத' எழுத்தாளராகவே இருந்தார். அவர் அளவிற்கு லட்சிய வெறிகொண்ட எழுத்தாளரைக் காண்பது அரிது. என்னுடைய படைப்புகள் இதற்காகத்தான் எழுதப்படுகின்றன என்பதில் தெளிவாக இருந்தவர்.

**கலைஞரின் கடிதங்கள் 'கடித இலக்கிய வகைமையைத் தமிழில் நிலைபெறுவதற்கு உதவியது. தன்னுடைய கடித இலக்கியத்தை, கட்சிக்காரர்களுடன் உடையாடுவதற்காக, தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காக மட்டும் அவர் எழுதவில்லை. சமூகத்துடன் பேசுவதற்கும் சமூகம் தன்னுடன் உரையாட வேண்டும் என்பதற்காகவும் எழுதினார். 1968முதல் 2016வரை அவர் எழுதிய கடிதங்கள் 54 தொகுப்புகள், 2022 பக்கங்கள். அத்தனையும் தனிமனிதருக்காக எழுதியதில்லை. சமூகத்திற்காக எழுதியது. நேரு, தன் மகள் இந்திரா காந்திக்காக எழுதியது போல் அல்ல. உலகில் 54 தொகுப்புகளாகக் கடிதங்களை எழுதிய ஒரு எழுத்தாளரைக் காட்ட முடியாது.**

கலைஞர் எப்போதும் தன்னுடைய எழுத்துக்கு நேர்மையாக இருந்தவர். தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில், அரசியல் வாழ்விலும் நடந்த நிகழ்வுகளைப் பகிரங்கமாக எழுதியவர். அவருடைய தன்வரலாற்று நூலான 'நெஞ்சுக்கு நீதி'யை (7 தொகுதிகள்) படிக்கும்போது, இந்த உண்மையை உணர முடியும். தன்னுடைய வாழ்வை சமூக வாழ்வாகவும் சமூக வாழ்வைத் தன்னுடைய வாழ்வாகவும் பார்த்தவர். வாழ்ந்தவர். 'நெஞ்சுக்கு நீதி' கலைஞருடைய தனிப்பட்ட கதை அல்ல. தமிழ்ச் சமூகத்தின் கதை. அவர் வாழ்ந்த காலத்தின் கதை. ஒருவிதத்தில் இந்தியச் சமூகத்தின் கதையும்தான். கலைஞருக்கு ரகசியங்கள் இல்லை. ஒரு எழுத்தாளனுக்கான பலம் என்பது தன் எழுத்தின் மீது அவன் கொண்டிருக்கும் உண்மையும்நம்பிக்கையும்தான். கலைஞர் கடைசிவரை நம்பிய விஷயம் இலக்கியம்தான்.

**நான் முதலில் கலைஞர் எழுதிய படைப்புகளைப் படிக்கவில்லை. அதைப் பற்றி பல பேர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவருடைய திரைக்கதை, வசனங்களைக் கேட்டிருக்கிறேன். நான் அதிகம் கேட்டது அவர் முதன்முதலாக பதினான்காவது வயதில் 1938இல் இந்தி எதிர்ப்புக்காக எழுதிய கவிதைதான். அந்தக் கவிதைதான் அவரை உலகிற்கு அடையாளம் காட்டியது. அந்தக்**



**இமையம்**
எழுத்தாளர்

**கவிதைதான் இன்றுவரை அவருடைய அடையாளமாகப் பேசப்பட்டுகொண்டிருக்கிறது. இந்தி திணிப்பு இருக்கும்வரை அந்தக் கவிதையும் உயிருடன் இருக்கும். அந்தக் கவிதையையும் நூற்றுக்கணக்கானவர்கள், நூற்றுக்கணக்கான மேடைகளில் சொல்லக் கேட்டிருக்கிறேன். இப்போதும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்தக் கவிதையைப் போல் அதிகம் பேசப்பட்ட 'கவிதை' வேறு இல்லை.**

1967இல் அண்ணா மறைந்தபோது கலைஞர் எழுதிய 'இரங்கற்பா' அகில இந்திய வானொலியில் ஒளிப்பரப்பப்பட்டது. அப்போது எனக்கு வயது மூன்று. அந்தக் கவிதை கலைஞரைப் புகழின் உச்சத்திற்குக் கொண்டுசென்றது. நாடறியச் செய்தது. அப்படியொரு இரங்கற்பா உலகில் இதுவரை எழுதப்பட்டதில்லை. கொண்டாடப்பட்டதுமில்லை. அந்தக் கவிதையையும் நான் பலர் சொல்லத்தான் கேட்டிருக்கிறேன். பிறகுதான் படித்தேன். அதே மாதிரி 'புறநானூற்றுத் தாய்' தலைப்பில் அவர் எழுதிய மூன்று கவிதைகளையும் முதலில் பலர் சொல்லித்தான் கேட்டிருக்கிறேன் பிறகுதான் படித்தேன். சொல்வளமும் மொழி வளமும் தமிழ்நாட்டு எழுத்தாளர்களில் அவரைத் தனித்து அடையாளம் காட்டின.

**'இந்தி எதிர்ப்புக்கான கவிதை', அண்ணா மறைவின்போது எழுதிய 'இரங்கற்பா' 'புறநானூற்றுத் தாய்' ஆகிய கவிதைகள்தான் எனக்கு கலைஞரின் எழுத்துகளைப் படிப்பதற்குக் காரணமாக இருந்தது. கலைஞர் எழுதிய கவிதைகள் (57), சிறுகதைகள் (76), நாவல்கள் (16), நாடகங்கள் (28), திரைக்கதை வசனங்கள் (62), திரையிசைப் பாடல்கள் (20), உரை நூல்கள் (4), கட்டுரைகள் (45), நினைவுப் பதிவுகள் (12) என்று ஒவ்வொன்றாக முனைவர் பட்ட ஆய்வு மாணவன்போல் படித்தேன். எல்லாவற்றையும் படிப்பதற்கு ஓராண்டுக்கு மேல் பிடித்தது. 'நெஞ்சுக்கு நீதி'யையும் கலைஞரின் கடிதங்களையும் முழுமையாகப் படிக்கவில்லை. என் திறமைக்கேற்ப கலைஞருடைய எழுத்துகளைப் புரிந்துகொண்டேன். நான் என்ன புரிந்துகொண்டேன், கற்றுக் கொண்டேன் என்பதை சொல்வதற்காகத்தான் நான் 'தனித்து ஒளிரும் நட்சத்திரம்' என்ற நூலினை எழுதியிருக்கிறேன். ஒரு எழுத்தாளரைப் பற்றி நான் எழுதும் முதல் விமர்சன நூல் இதுதான். கடலிலிருந்து ஒரு கைப்பிடி நீர்.**

---

## மகளிர் உரிமைத் தொகையை
# முன்கூட்டியே வழங்கியதில் எந்தத் தவறும் இல்லை!
### சட்டப் பேரவையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி விளக்கம்!

**சென்னை, பிப். 22 - சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கலந்துகொண்டு பேசியபோது, மகளிர் உரிமைத் தொகையை முன்கூட்டியே வழங்கியது குறித்து குறிப்பிட்டார்.**

**அப்போது குறுக்கிட்டு விளக்கம் அளித்த இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மகளிர் உரிமைத் தொகையை முன்கூட்டியே வழங்கியதில் எந்தத் தவறும் இல்லை என்று விளக்கம் அளித்தார்.**

*அவர் குறிப்பிட்டதாவது: Supreme courtல் அரசுகள் வழங்கும் இலவசத் திட்டங்கள் குறித்த வழக்கு ஒன்று தற்போது நிலுவையில் இருக்கிறது. அது மார்ச் மாதம் விசாரணைக்கு வரயிருக்கிறது.*

*தேர்தலுக்காக பரிசுப் பொருட்கள் கொடுக்கலாமா, கொடுக்கக்கூடாதா, அரசியல் கட்சிகள் கொடுக்கலாமா போன்றவையெல்லாம் அந்த case னினுடைய issue வில் இருக்கிறது. (குறுக்கீடு)*



*எனவேதான், அப்படிப்பட்ட ஒரு வழக்கு வரும்போது அதிலேயும் ஒரு sub ject matter ஆக ஆகக்கூடிய பொருள் இருக்கிறது.*

*எனவே, இரண்டாயிரம் ரூபாய் கோடை காலத்திற்காக கொடுத்தது என்பதிலே எந்தத் தவறும் இல்லை. மகளிர் உரிமைத் தொகையைத் தொடர்ந்து மூன்று மாதங்களுக்குக் கொடுத்ததிலும் எந்தத் தவறும் இல்லை.*

*இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி விளக்கம் அளித்தார்.*

---

## இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான்
# பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மிகவும் குறைவு!
### சட்டப் பேரவையில் – அமைச்சர் கீதாஜீவன் ஆதாரங்களுடன் விளக்கம்!

*சென்னை, பிப். 22- "இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மிகவும் குறைவு!" என்று, சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கீதாஜீவன் ஆதாரங்களுடன் விளக்கமளித்தார்.*

*விவாதத்தின் நடுவே அமைச்சர் குறுக்கிட்டு அளித்த விளக்கம் வருமாறு:*

*இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மிகவும் குறைவு !*

*அதனுடைய புள்ளி விவரங்கள் என் கைவசம் இருக்கின்றன.*

*2023 ஆம் ஆண்டிற்கான தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கை. அதிகப்படியான மக்கள்தொகை உள்ள மாவட்டங்களில் பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வு குறைவாக உள்ள முதல் 5 மாநிலங்களில், 4வது இடத்தில் தமிழகம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*உதாரணமாக, மொத்த பாலியல் வன்கொடுமை வழக்குகளின் எண்ணிக்கை அகில இந்திய அளவில் 29,670. இதில் 55% நம்முடைய பா.ஜ.க. ஆட்சி செய்கிற 5 மாநிலங்கள், ராஜஸ்தான் 5,078, உத்திரப்பிரதேசம் 3,516, மகாராஷ்டிரா 2,930, மத்தியப் பிரதேசம் 2,979, ஹரியானா 1,872, தமிழ்நாட்டில் 365.*



*அதேபோல், கூட்டுப் பாலியல் வல்லுறவு வழக்குகளின் எண்ணிக்கை அகில இந்திய அளவில் மொத்தம் 1,753 அதில் 88% வெறும் 6 மாநிலங்களில் மட்டும் இருக்கின்றன.*

*ராஜஸ்தான் 867, உத்திரப்பிரதேசம் 244, மத்தியப் பிரதேசம் 150, ஹரியானா 131, மகாராஷ்டிரா 67 தமிழ்நாட்டில் வெறும் 3 வழக்குகள்தான்.*

*அதேபோலத்தான், மாற்றுத் திறனாளிகளுக்கு எதிரான வழக்குகள் தமிழ்நாட்டில் 10. ஆனால், அகில இந்திய அளவில் மொத்தம் 132. அதேபோல், வரதட்சணைக் கொடுமை வழக்கு அகில இந்திய அளவில் 6,211. இவ்வாறு 73% வழக்குகள் இதே உத்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருக்கின்றன.*

*தமிழ்நாட்டில் 11 வரதட்சணை இறப்புகள்தான் இருக்கின்றன.*

*அதேபோல், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில் அகில இந்திய அளவில், பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களில், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில், தேசிய சராசரி 77.6, தமிழ்நாட்டில் 91 சதவிகிதம். குழந்தைகளுக்கு எதிரான குற்றம் என்று பார்த்தீர்களென்றால் தேசிய அளவில் 63.4 சதவிகிதம். ஆனால், தமிழ்நாட்டில் 93 சதவிகிதம்.*

*ஆகவே, இங்கு குற்ற நிகழ்வுகள் நடந்தவுடனேயே அவர்களுக்கு வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுகிறது. அரசே அந்த பாதிக்கப்பட்டோர் அனைவருக்கும் உதவி செய்து வழக்குகளையும் நடவடிக்கை எடுத்து நடத்துகிறது. அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்கிறது.*

*அதுமட்டுமல்லாமல், நம்முடைய காவல் துறை, சமூக நலத் துறை, கல்வித் துறைமூலம் விழிப்புணர்வு மட்டுமல்லாமல் நடவடிக்கையும் காவல் துறைமூலம் விரைந்து எடுக்கப்படுகிறது என்பதை நான் இங்கு உறுதியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் பதில் அளித்தார்.*

---

## தி.மு.க. இளைஞர் அணி
### அறிவிப்பு!

**கா**ஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.மணிகண்டன் (3/28, சுந்தரவிநாயகர் கோயில் தெரு, சின்ன நத்தம், செங்கல்பட்டு) அவர்கள் வகித்துவரும் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுகிறார்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 20.02.2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

## சட்டப்பேரவையில்
# உலகத் தாய் மொழி நாள் உறுதிமொழி!

**சென்னை, பிப். 22 –**

**உலகத் தாய்மொழி நாள்–உறுதிமொழி எடுத்தல் குறித்து சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் படித்த குறிப்பு வருமாறு:**

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 21-2-2026 நாளை உலக தாய்மொழி நாள் ஆகும். உலகெங்கும் உள்ள மக்களுக்கு முக்கியமானதும், அவர்களுடைய மனதிற்கு நெருக்கமானதும் ஒன்று உண்டென்றால், அது அவர்களுடைய தாய்மொழிதான். நாளை சனிக்கிழமை அரசு விடுமுறை என்பதால், இன்று அரசு அலுவலகங்களில் முற்பகல் 11-00 மணிக்கு தாய்மொழி குறித்த உறுதிமொழி எடுத்துக்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. அந்தவகையில், உலக மொழிகளில் தொன்மை வாய்ந்ததும், முதன்மையானதுமான செம்மொழியாம் நம் தாய்மொழி, தமிழ்மொழியைப் போற்றி வணங்கும் வகையில் நாம் அனைவரும் எழுந்து நின்று, பேரவையிலும் பின்வரும் உறுதிமொழியை எடுத்துக்கொள்வோம் என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நான் உறுதிமொழி வாசகங்களை படிக்க படிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் திரும்பச் சொல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**"எங்கும் தமிழ்**
**எதிலும் தமிழ்**
**எப்போதும் தமிழ்**
**என்ற நடைமுறையைக்**
**கொண்டுவரப் பாடுபடுவோம்.**

**தேமதுர தமிழோசை**
**உலகெங்கும் ஒலிக்க**
**எந்நாளும் உழைத்திடுவோம்.**

**அனைத்து ஆவணங்களிலும்**
**தமிழிலேயே**
**கையொப்பமிடுவோம்.**

**குழந்தைகளுக்குத்**
**தமிழ் மொழியில்**
**பெயர் சூட்ட**
**பரப்புரை செய்திடுவோம்.**

**இணையற்ற தமிழுடன்**
**இணையத் தமிழையும்**
**காத்து வளர்ப்போம் என்று**
**உளமார உறுதி கூறுகிறேன்."**

(பேரவைத் தலைவர் அவர்கள் உறுதிமொழி வாசகங்களைப் படிக்க, உறுப்பினர்கள் அதனைத் திரும்பச் சொல்லி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.)

---

## குமரமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடனப் பயிற்சியின் போது
# மயங்கி விழுந்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் - நிதியுதவி!
### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப். 22 - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் நூற்றாண்டு விழா நடனப் பயிற்சியின்போது மயங்கி விழுந்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் கிராமம், கவுண்டபாளையம் குடித்தெருவில் வசிக்கும் மாதேஸ்வரன் - தனலட்சுமி தம்பதியரின் மகள் செல்வி. ரக்ஷிதா (வயது 8) குமரமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பு பயின்றுவந்த நிலையில் கடந்த 08.02.2026 அன்று மறுநாள் நடக்கவிருந்த பள்ளியின் நூற்றாண்டு விழாவிற்காக நடைபெற்ற நடனப் பயிற்சியில் எதிர்பாராதவிதமாக மயங்கி விழுந்து, நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, 9.2.2026 பிற்பகல் 1.50 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

---

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
# 'சொல் புதிது' என்னும் திட்டத்தின் 10 வது கூட்டம்!
### முனைவர் ம.ராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, பிப். 22 - முதல்வர் அளித்த நிதி உதவியில் செயற்பட்டுவரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் 'சொல் புதிது' என்னும் திட்டத்தின் 10 ஆவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 18.02.2026 முற்பகல் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் முனைவர் சரவணன், முனைவர் ஒப்பிலா மதிவாணன், முனைவர் பாரதிபாலன், முனைவர் கஸ்தூரி ராஜா, முனைவர் ம.இளங்கோவன் மற்றும் ஊடகவியலாளர்கள் ராஜ் கண்ணன், மு.முருகேசன் சமூக ஊடகவியலாளர் நீச்சல்காரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் 26 சொற்கள் இறுதி செய்யப்பெற்றன. பார்வைக்கும் பகிர்வுக்கும்.

Air shuttle - விமான வளாக உந்து, Airport Lounge - விமான நிலையத் தனி ஓய்வறை, Angel Fund - வளர்நல நிதி, Angel inves tor வளர்நல முதலீட்டாளர், Bread Omelette - ரொட்டி முட்டையடை, chicken lollipop-கோழிக்கறிக் குச்சியுருண்டை, Face authentica tion - முகவழி உறுதி, Grand mas ter - பெருவாகையர், Growbag - செடி வளர் பை, Lipgloss - இதழ்ப் பொலிவூட்டி, Lookout notice - தேடல் அறிவிப்பு, Msand - மாற்று மணல், Photo gallery - படக்காட்சியகம், Photoshoot- ஒளிப்பட எடுப்பு, Prank call - பகடி அழைப்பு, Ramp walk - மேடைநடை, Rum ble strips - வேகத்தடைப் பட்டை, Satellite Bus - இணைப் பேருந்து, Semi Sleeper seat - சாய்விருக்கை, Sleeper seat - படுக்கை இருக்கை, Soft bristle - மெல்லிழைத் தூரி, Spam call - பயனிலா அழைப்பு, Tea master - தேநீர் போடுநர், Translocation - இடப் பெயர்வு, U turn - எதிர்த்திசைத் திருப்பம் / திசை எதிர்த் திருப்பம், WHEELCHAIR RAMP சக்கரநாற்காலிப் பாதை ஆகிய 26 சொற்கள் கூட்டத்தில் இறுதி செய்யப் பெற்றன.